1971 ஜூலை 22]

நிலஉச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் உள்ள உபரி நிலங்கள்.

* 378 வினா—திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு நில உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப் பட்ட பிறகு உள்ள உபரி நிலங்கள் இம்மாநிலத்திலுள்ள நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்;

(இ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (உபரி நிலங்கள் முடிவு செய்தல்) விதிகள் 1965-ன் விதி 5 (1)-ல் குறிக்கப்பட்டுள்ள முறைப் படி உபரி நிலம் தகுதி உள்ளவர்களுக்கு அடமானம் செய்யப்படு கிறது. இதுவரை 10,714 நபர்களுக்கு 18,752 ஏக்கர் அடமானம் செய்யப்பட்டுள்ளது. நிலமில்லாத ஏழை மக்களுக்கும் மற்றவர் களுக்கும் மேலே குறிப்பிட்ட முறையில் எவ்வளவு நிலம் அட மானம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தயாராக இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், 30 ஏக்கர் என்று உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்த போது, எத்தனை ஏக்கர் உபரி நிலம் எடுப்பதாக உத்தேசத்தில் இருந்தது ? இப்பொழுது கழக ஆட்சி வந்ததும், 15 ஏக்கர் என்று உச்சவரம்புச் சட்டம் செய்ததன் மூலமாக எத்தனை ஏக்கர் நிலம் எடுக்கப்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற் கனவே 30 ஸ்டான்டர்டு ஏக்கர் என்று உச்ச வரம்பு இருந்த பொழுது 'எக்ஸ்டன்ட் நோட்டிபைடு ஆஸ் சர்ப்பளஸ்' 28,317. இப்பொழுது இன்னும் விவரம் கையிலே வரவில்லை. வந்ததும் இந்த அவையிலே சொல்லுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத் தின் கீழே உபரி நிலங்கள் அதிகமாக அரசாங்கத்திற்கு வரும். அதை நிலம் இல்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம் என்று எதிர்பார்த்தது. ஆனால், இந்த சட்டம் வருவதற்கு முன்னாலேயே பலர் தங்களுக்கு இருந்த அதிகப்படியான நிலங்களைப் பல்வேறு பிரிவாகப் பிரித்து எழுதிக் கொண்டதாலே சர்க்கார் எதிர்பார்த்த நிலம் கிடைக்காமல் போய்விட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிலம் அற்ற விவசாயி களுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கும் வகையிலே உபரி நிலம் அதிக மாகக் கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால், எதிர்பார்த்தபடி உபரி நிலம் கிடைக்கவில்லை என்பது உண்மை தான்.